Arima Nokku
15:4 சனவரி 202[illegible]
ISSN 2320-4842

# அரிமா நோக்கு

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல் சார் பண்பாட்டுக் காலாண்டிதழ்
INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART CULTURE, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்
UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

Dr. A. Mahabobu

https://arimanokku.com UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL **ISSN 2320-4842**

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842

அரிமா நோக்கு
18:4 சனவரி 2025

*ஆசிரியர்*
இரா. பன்னிருகைவடிவேலன்

*ஆசிரியர் குழு*
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
தே. ராஜகுமார்
த. பாலமுருகன்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாசிரியர்*
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

சங்ககாலத் திணை விளைவித்தலும் சூழலமைவும் - சு. திலகவதி 04
சிறுவர் இதழ்கள் ஆய்வு - பெ. பவானி 11
சூல் நாவல் காட்டும் உருளக்குடி மக்கள் வாழ்வியல்
முனைவர் த. வசந்தாள் 19
தேசிங்கு ராஜன் கதைப்பாடலில் : வாய்பாடு - அ. வினிதா 32
இனக்குழு மக்களின் நம்பிக்கை - மகிமைப் பொருள்கள்
மானிடவியல் அணுகுமுறை - க. விஜயகுமாரி 36
மாடு சார்ந்த மருந்து மருத்துவம்
கு.வருதராஜ் - முனைவர் செ.இளையராஜா 40
மூங்கிலரிசி வெடிக்கும் பருவம் கவிதைகளில் பெண்கள்
ச. நாகராஜன் - முனைவர் ப. கண்ணுமுத்து 49
தமிழர் பண்பாட்டில் கிராமிய வழக்காறுகள்
சி. விநாயக மூர்த்தி 51
வேலராமமூர்த்தியின் அரியநாச்சி நாவல் வெளிப்படுத்தும்
குடும்பஅமைப்பு முறைகளும் சிக்கல்களும்
சி. ஜெயப்பிரகாஷ் - முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா 54
தமிழிலக்கிய வகைமையில் தலபுராணங்கள் - செ. யுவஸ்ரீ 58
ஆனைமலை வட்டார நாட்டுப்புற மருத்துவம்: பெண்கள்
மா. செந்தில் குமார், முனைவர் வெ. பன்னீர் செல்வம் 62
சிலப்பதிகாரமும்- கண்ணகி வழக்குரைக் காப்பியமும்
முனைவர் அ. மகபூபூ 66
இயற்கை நோக்கில் தமிழர்சால்பு - முனைவர் கி. ராம்கணேஷ் 71
தமிழ் இணைய இதழ்களின் வகைப்பாடும், சிறப்புகளும்
முனைவர் ந. ஞானமணி 74
இலக்கிய வகைமை நோக்கில் பழனித் திருவாயிரம்
முனைவர் ந. அரவிந்த்குமார் 78
சங்க மாந்தரின் காலக் கணிப்பான்
முனைவர் பா. ஷியாமளாதேவி 83
சூழலியல் நோக்கில் சங்கத் தமிழரின் நீர் மேலாண்மை
முனைவர் மா. கார்த்திகேயன் 86
தேவாரம் சுட்டும் திருக்கோயில்கள்-முனைவர் இரா.வனிதாமணி 89
திருத்தக்கத் தேவர் பார்வையில் அமைச்சர் - முனைவர் க. ர. லதா 93
உளவியல் நோக்கில் சிவப்பிரகாசப் பாடலில்
தனிமனித மனநிலையும் சமூகமும் - முனைவர் ர. நித்யா 96
வாய்மொழி மரபில் மகாபாரதப் பிரசங்க மரபு
முனைவர் மு. ஏழுமலை 100
தலவிருட்சங்களின் தோற்றப் பின்புலமும் மருத்துவ கூறுகளும்
(திருஞானசம்பந்தர் பதிகங்கள்)-முனைவர் த.பரமேசுவரி 107
சங்கத் தமிழர் வணிகமும் வாழ்வியலும்
முனைவர் தே. ராஜகுமார் 112
திருமூலர் காட்டும் அன்பு நெறி - முனைவர் ப. கார்த்திக் 119
பிரபஞ்சன் நாவல்களில் சமூகம் - முனைவர் ச. இராஜலதா 121
உயிர்க்கோட்பாடு - உலகாயிதத்தில் உயிர்
முனைவர் த. பாலமுருகன் 125
சமயம் வளர்த்த பெண்களின் உள்ளத்து உணர்வுகள்
முனைவர் சி. கவிதா 128
தேனி, திண்டுக்கல் வட்டாரத்தில் அஞ்சரைப்பெட்டி மருந்துவம்
ப. கனகவள்ளி - முனைவர் தே. ராஜசீலி 131

முதல் ஐந்து பாரதம் வரை றனர்.

ாரத நூல்களில் உள்ள செய்யுள் யோடு பாடியும், செய்யுள்களுக்கான உரைநடையாகக் கூறியும், சில நின்றுகொண்டு பாரதம் கூறும்போது கழ்த்துவது பாரதப் பிரசங்கத்தின்

**த்துச் சூழலில் ஆட்டமும் அடவு**

பாரதப் பிரசங்க நிகழ்த்துதல் மேடையில் அமர்ந்துகொண்டு முறையாகவே உள்ளது. ஒரு சில மட்டும் நின்றுகொண்டு நிகழ்த்தும் ாது. இந்நிலையில் நிகழ்த்தும்போது களுக்கு ஏற்ப அடவிட்டும் ஆடியும் ஆந்திரப் பகுதியில் பெரும்பாலும் கிகள் மட்டுமே பாரதக் கதையை றனர். இவர்கள் மூன்றுமணி நேரமும் டே பாரதத்தை பிரசங்கமாக றனர். இசையோடும் பாடும் மரபு ளம், சப்ளாக்கட்டை, மிருதங்கம், போர்டு, பம்பை உள்ளிட்ட பல கள் பயன்படுத்துவதால் ஆடியும் சிறப்பாக நிகழ்த்தும் மரபு உள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஆதரிக்கும் நிலையும் ின் பொருளாதாரமும்**

ங்க நிகழ்த்துக்கலையின் வளர்ச்சி வழிபாடுகள்தான் முதன்மையான ின்றன. குறிப்பாக தமிழகத்தில் திரௌபதியம்மன் கோயில்களில் ம் குறைந்தபட்சம் 400 கோயில் விழா நடைபெறுவதால் அனைத்து ங்கிகளுக்கும் பிரசங்கம் நிகழ்த்து ாய்ப்பு உள்ளது. இவை மட்டுமின்றி அனைத்து தெய்வங்களுக்கான ம் அந்தந்த தெய்வங்களின் றுவதற்கான பிரசங்க நிகழ்த்துதல் செய்யப்படுகின்றன. அதனால் ம் பிரசங்கம் செய்வதற்கான சூழல் பிரசங்கிகளுக்கு குரல் வளமும், ியும், நூலறிவும், நிகழ்த்துதலின் கிளைக்கதைகளையும் சமகால பும் இணைத்துக் கதையைக் நகைச்சுவை சார்ந்த கதைகளைக் லான திறன் உடைய பிரசங்கிகள் ம் நிகழ்த்துதலில் ஈடுபடுகின்றனர்.

இவற்றோடு தனிப் பாரதம் அதாவது ஒருநாள் பாரத நிகழ்த்துதலாக வாழ்க்கை வட்டச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகளில் நிகழ்த்தும் போது ரூ.3000 முதல் ரூ.5000 வரை பெறப்படுகிறது. ஒரு முழு பாரத நிகழ்வுக்கு (முப்பது நாட்கள்) ரூ 1,00,000 முதல் 1,50,000 வரை பெறப்படுகிறது.[3] ஒரு பாரதபிரசங்கியார் இன்றைய நிலையில் ஒரு வளமான வாழ்க்கையை பாரதப் பிரசங்க நிகழ்த்துதல் மூலம் பெற முடிகிறது.

**கலையின் இன்றைய நிலை**

இன்றைய நிலையில் பாரதப் பிரசங்க நிகழ்த்துதல் கலை மிக வளமான நிலையில் உள்ளது. கோயில்களின் உருவாக்கம் அதிகரிப்பதாலும், நவராத்திரி விழா, விநாயகர் சதுர்த்தி விழா, விநாயர் கோயில்களில் மாதந்தோறும் சங்கடாசதுர்த்தி விழா, கிருஷ்ண ஜெயந்தி விழா, மாதந்தோறும் சிவன் கோயில்களில் பிரதோஷ விழா, கேகாயில்களின் குடமுழுக்கு விழா, அடியார்களுக்கான குருபூசை விழா என நாளுக்குநாள் பிரசங்கம் நிகழ்த்துவதற்கான சூழல்கள் அதிகரித்துக்கொண்டே செல்வதால் பிரசங்கம் நிகழ்த்துவதற்கான பிரசங்கிகளின் பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. ஆனாலும் இசையாளர்களாக ஓரிரு ஆண்டுகள் நிகழ்த்தியவர்கள் முதன்மையான பிரசங்கியராக உருவாகும் நிலையும், பிரசங்க நிகழ்த்துதலில் ஆர்வமுடைய இளைஞர்கள் கலைஞர்களாக தொடர்ந்து உருவாவதாலும் இக்கலை வளர்ச்சி பெறும் கலையாக தொடர்வது இக்கலையின் சிறப்புகளில் ஒன்றாகும்.[4] இக்கலை நிகழ்த்துதல் தமிழகத்தின், தமிழரின் பண்பாட்டுத் தன்மையைக் கட்டமைப்பதாகவும், வெளிப்படுத்துவதாகவும், வளர்த்தெடுப்பதாவும் உள்ள நிலையில் தமிழகப் பார்வையாளர்களி டையே இக்கலை நிகழத்துதல் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**சான்றெண் விளக்கம்**

1.வி.அரசு, பாரதக் கதையும் நிகழ்த்து மரபும் (கட்டுரை), தமிழகத்தில் பாரதம், வரலாறு, கதையாடல், ப.59.

2.இரா.சீனிவாசன், திரௌபதியம்மன் விழாவும் பாரதப் பிரசங்கமும் (கட்டுரை), தமிழகத்தில் பாரதம், வரலாறு, கதையாடல், ப.84.

3.புலவன்பாடி இராமஜோதி, வயது 65, 13.10.2024.

4.திருமணி A.D. பாஸ்கர், வயது 43, 15.10.2024





# தலவிருட்சங்களின் தோற்றப் பின்புலமும் மருத்துவ கூறுகளும் (திருஞானசம்பந்தர் பதிகங்கள்)

முனைவர் த. பரமேசுவரி
இணைப்பேராசிரியர் & தமிழ்த் துறைத்தலைவர்
ந.க.ம.கல்லூரி, பொள்ளாச்சி

பஞ்சபூதம் செய்யும் உதவிகளைப் பூமிவாழ் உயிரினங்கள் பெற்றுக்கொண்டு இயற்கையோடு இயற்கையாக வாழ்க்கை நடத்தி வந்தனர். இயற்கை உயிரினங்களுள் தாவரங்களே பெரிதும் மனித வாழக்கைக்கு உதவியாக இருப்பவை. இவையே மனிதன் வாழ பிராண வாயு, உணவு, கனிம வளம், உரம், மருந்து என பலநிலைகளில் நின்று வாழ்விக்கின்றன. இந்தவுண்மையை அறிந்ததால் தான் பழந்தமிழர்கள் இயற்கையோடு இயற்கையாக வாழ்க்கை நடத்தினார்கள் என்பதை, "தாவரத்தைத் தமிழர்கள் மதித்தது போல உலகில் வேறு எந்த இனத்தாரும் மதித்ததில்லை என்று உறுதியாகச் சொல்லிவிடலாம். சமயம், பண்பாடு, உணர்ச்சிக்கூறுகள், வாழ்க்கை என்று ஒவ்வொரு துறையிலும் தாவரப்பெயர்களை இட்டு வணங்கி வந்திருக்கிறார்கள்." (இல. சண்முகசுந்தரம், தமிழரும் தாவரமும்) என்ற கருத்து முற்றிலுமான உண்மையைப் பறைசாற்றும் விதத்தில் அமைந்துள்ளது. எனவே தான், தொல்சமயங்களான சைவம் மற்றும் வைணவத் திருக்கோயில்களில் தலவிருட்சங்களாக நட்டு வழிபாடு செய்யப்படுகிறது. இது அனைவரும் அறிந்ததே என்றாலும் அதற்கானக் காரணங்களை அறிந்தவர்கள் மிகச்சிலரே. அரிதானதை அறிய வைக்கும் ஒரு முன்னோட்டமே இவ்வாய்வுக் கட்டுரை.

கோயில் கட்டுமானங்களே நமக்கு விஞ்ஞானக் கூறுகளோடு அமையப் பெற்றதும் மருத்துவப்பயன் விளைவிக்கப்பெற்றதுமாகும். இதுவே மனத்தூய்மையையும் உடல் தூய்மையையும் வளர்க்கும் உன்னத இடங்கள் என்பதால் திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களில் அமைந்துள்ள தலவிருட்சங்களின் தன்மைகளை தோற்றப் பின்புலத்தோடும் மருத்துவக் கூறுகளோடும் பொருத்திப் பார்த்து, முத்தாய்ப்பாக சிலவற்றை மட்டும் பின்வருமாறு விளக்கப்படுகிறது.

**மரங்களும் இடம்பெற்றுள்ள பாடல் எண்களும்**

*1.பாரிசாதம் என்னும் பவழமல்லிகை* (NYCTANHNTHEX ARCORCRIFCIF )

*1, 9, 19, 24, 29, 30, 34, 47, 60, 63, 66, 71, 73, 74, 79, 81, 90, 97, 102, 104, 109, 117, 126, 127, 128, 137, 147, 161, 164, 165, 176, 185, 187, 188, 190, 195, 201, 206, 209, 210, 211, 217, 219, 223, 225, 232, 233, 238, 249, 258, 260, 263, 265, 270, 271, 282, 295, 301, 314, 325, 333, 340, 342, 347, 358, 368, 371, 375 , 376*

*2. புன்னை - 2, 50, 123, 165, 183, 251, 253, 277, 324, 353, 269, 370*

*3. பாதிரி - 3, 91, 105, 215, 237, 257, 303, 339, 352, 367*

*4. விழிச் செடி - 4, 11, 20, 35, 49, 82, 92, 124, 131, 267, 338, 343, 356, 369, 374, 377*

*5. கள்வாழை, ஆத்தி - 6, 61, 300, 321*

*6. கடம்பமரம் - 7, 94, 202, 204, 297, 305, 309, 366, 367, 373, 378*

*7. அரசு- 8, 84, 231, 270, 362*

*8. மகிழம் மரம்- 10, 69, 294, 315, 326*

*9. வன்னி 12, 22, 25, 38, 41, 42, 44, 53, 87, 93, 131, 139, 140, 173, 180, 186, 200, 205, 212, 227, 243, 245, 274, 287, 288, 292, 313, 317, 322, 327, 331, 334, 357*

*10. உறங்காப்புளி - 14*

11. ஆலமரம் - 16, 33, 80, 170, 184, 226
12. வில்வம் 17, 36, 432, 52, 54, 55, 86, 112, 113, 120, 130, 138, 139, 142, 157, 168, 193, 198, 199, 236, 242, 248, 256, 264, 287, 290, 296, 302, 321, 336, 341, 354, 363
13. விளா மரம் - 18
14. கொன்றை - 23, 26, 51, 316, 335
15. புங்கமரம் - 27
16. இலந்தை - 31, 208, 241, 380
17. மருது - 31, 95, 110, 118, 122, 192
18. பனை- 37, 53, 145, 189, 286, 306, 361, 320
19. மூங்கில் - 39, 196
20. வாகை - 40
21. பலா- 45, 64, 157, 240, 247, 278, 353
22. சரக்கொன்றை - 46, 77, 101, 379
23. வேலமரம் - 57
24. அலரி - 58
25. சண்பகம் - 59, 114, 160, 255, 276, 293
26. தேற்றா மரம்- 62
27. மல்லிகை - 65, 76, 144, 370
28. வாழை- 67, 103, 135, 154, 158, 194, 239
29. கருங்காலி -83, 351
30. மாமரம் - 84, 108, 133, 148, 252, 291, 299, 372, 383
31. வெள்ளெருக்கு- 89, 146
32. எலுமிச்சை - 96, 330
33. இலுப்பை - 107
34. கிளுவை ஹ- 111
35. திரிபலா - 118
36. பராய் மரம் -134
37. சந்தனம் -143, 156
38. நந்தியா வட்டம்-150
39. அகில்-151
40. நெல்லி-155, 162
41. கருடி முல்லை-167,
42. தருப்பை -169, 345
43. வைஞ்சாய் -174, 177
44. வேம்பு-179
45. கோங்கிலவு-181
46. பலாசு-182
47. புரசமரம்-191
48. வடஆலமரம்-97, 273
49. குறும்பலா -207
50. வெள்வாழை-218, 332
51. புன்னாகம் -222, 365
52. முல்லை -224, 304
53. தென்னை -229, 349
54. உத்தாலமரம்-234, 348
55. துளசி-244
56. மந்தாரை-254,
57. தில்லை-259
58. படர் அரசு-262
59. குருண்டை -269, 308
60. சதுரக்கள்ளி-270
61. நீலி-272
62. கண்டமரம் -289
63. தாழை-289, 367
64. வெண்நாவல்-311, 367
65. காரை-323
66. மாவிலந்தை-343

1.பாரிசாதம் என்கிற பவழமல்லிகை (NYCTANHNTHEX ARCORCRIFCIF)

*சமஸ்கிருதம்: (பாரிஜாதம், செபாலிகம், ரஜகனிசம்)*

*ஹிந்தி: ஹார்சிங்கார்*

*ஆங்கிலம்:*(NYCTANHNTHEX ARCORCRIFCII )

**தோற்றம்**

திருபாற்கடலைக் கடைந்தபோது கிடைத்த பல பொருட்களில் பாரிசாதமும் ஒன்று. இதைப் பெற்றுக் கொண்ட இந்திரன் தனது அமராவதி தோட்டத்தில் பயிர்செய்து வளமாக்கினான். இதில் உதிர்ந்த மலர்களை மாலையாகத் தொடுத்து நாரதர் பூமிக்கு வந்தபோது கிருஷ்ணனிடம் கொடுக்க, அதை அவர் ருக்குமணிக்கு வழங்கியதைச் சத்தியபாமாவிடம் நாரதர் கலகம் செய்ய, கிருஷ்ணனுடன் பாமா சண்டை போட எழுந்ததே கிருஷ்ணா இந்திர யுத்தம். இந்திரனை வென்று வேருடன் பறித்த மரத்தைப் பூமிக்குக் கொண்டு வந்து பாமாவை சமாதானம் செய்தார். இதன்பின் இது வழிபாட்டு மலராகியது. தென்னாடுகளில் இல்லந்தோறும் இந்த மரங்களை வளர்த்தால் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கை உள்ளது.





**தன்மைகள்**

ஒரு சிறிய மரம். பூவின் காம்புகள் பவள நிறம் உடையது. பூ நறுமணம் உடையது. மாலையில் பூத்துக் காலையில் உதிரும். மானாவாரி நிலங்கள் வறட்சி தாங்கி வளரும் பண்புடையது. பரிசுத்த மேம்பாட்டுக்கு உகந்த மரம். நிறைய இலைகளை உதிர்த்து மண்ணை வளப்படுத்தும். 25 அடி வரை வளரும். இமயமலைக் காடுகளிலும், மேற்குத் தொடர்ச்சி மலை, விந்திய சாத்பூரா மலைக்காடுகளிலும் நிறையக் காணப் படும். அடர்ந்த கிளை அமைப்பும் இலை சொரசொரவென்று இருப்பதாலும், தூசிகளை வடிகட்டி நிறைய பிராணவாயுவை அளிக்கும்.

**மருந்துவப் பயன்பாடு**

**இலை**

இலைக் கொழுந்தை இஞ்சிச்சாற்றுடன் அரைத்து ஊளை சுரத்துக்குக் கொடுக்கலாம். வெந்நீரையிட்டு நன்றாக ஊறவைத்து நாள்தோறும் இருவேளை கொடுத்துவர முதுகுவலி போகும். பாம்பின் விசத்தை முறிக்கும். சாறுடன் சிறிது உப்பிட்டு சிறிது தேனும் கலந்து குழந்தைகட்குக் கொடுக்க மலத்துடன் புழுக்களும் வெளியாகும். இந்தக் கருத்தை.

"பவளமல்லி பூத்தூளே பாரிசநோய் நீக்கும்

தவளநகை தோள்சொறிக்கு மாற்று"

(கி. ரத்தினவேலனார் சித்தமருத்துவக்குறள்-124)

என்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பட்டை

இதை வெற்றிலை பாக்கோடு சேர்த்து மெல்ல மார்பிலுள்ள கபத்தை விலக்கும்.

**விதை**

சூரணமிட்டு தலையில் உண்டமாகும் சொறி, சிரங்குகளுக்குப் போடலாம்.

பூ

இப்பூவையிடித்து வரும் சாற்றைக் கொதிக்க வைத்து தேங்காய் ஓட்டில் ஊற்றி வெய்யிலில் இறுகக் காயவைப்பர். இறுகியபின் தேவைப்படும் பொழுது தண்ணீர் விட்டுக் கரைத்து குழந்தைகளுக்குச் சாந்தாகப் பயன்படுத்தும் பழக்கம் இருந்தது.

இந்த மரக்கன்றுகள் பெற ஆத்தூர் மரவளர்ப்புப் பண்ணை - இராமசாமியின் தொடர்பு எண்: 9865437876

2. வன்னி:

*சமஸ்கிருதம்: ஷாமி*

*ஹிந்தி : கெஜ்ரி, ஜாண்ட்*

*ஆங்கிலம்:* Sami Tree; Khejri (prosopis cinsrraria/ Spicigera) Minosacdas

**வரலாறு**

கி.பி.1495இல் மராட்டிய வீரன் ஜம்பாஜி உருவாக்கிய சித்தாந்தம் "வன்னி மர வளர்ப்பு" ஆனது எட்டாண்டு வறட்சியை இலந்தையும் வன்னியும் தாங்கி வளர்ந்ததையும் பஞ்சகாலத்தில் ஒன்றுமே கிடைக்காத சூழ்நிலையில் வன்னிப் பழங்களை உண்டு மக்கள் பசியாறியதையும் எண்ணி பிஷ்ணாய் சித்தாந்திகள் உருவானார்கள். 16 மைல் தூரத்திற்கு வன்னி மரக்காடுகள் உருவாயின. பின்பு 250 ஆண்டுகள் கழித்து மராட்டிய மன்னர் சுண்ணாம்புக் காளவாய்க்கு வன்னி மரக்காட்டை அழிக்க முடிவு செய்து சிப்பாய்களை அனுப்பினார். பிஷ்ணாய்களால் தடுக்கப்பட்டும் கூட முடியாமல் அவர்களைக் கொன்றதோடு மரங்களும் வெட்டப்பட்டன. 1977 இல் உயிர்த்தியாகம் செய்த 363 பிஷ்ணாய்களுக்கும் 363 வன்னி மரங்கள் நடப்பட்டன. இப்படியாக இராஜஸ்தான் மக்களுக்கு வன்னிமரம் அவர்களின் உயிர் மரம்; அங்கே ஆடுகளுக்கும், ஒட்டகங்களுக்கும் வன்னி மரங்களே உணவளிக்கும் உயிர் நாடியாகும். ஆகவே தான் வறட்சி தாங்கும் வன்னி மரத்தை 1988 ஜீன் 5 ஆம் தேதியான உலகச் சுற்றுச்சூழல் தினத்தில் இந்தியா வெளியிட்ட தபால்தலையில் இடம்பெறச் செய்தார்கள்.

**தன்மைகள்**

முள்ளுள்ள இலையுதிர் மரம்; முள் மென்மையானது மேல்நோக்கி வளரும்; 25 அடிக்கு மேல் உயர்வது அரிது; மழைக்காலம் முடிந்த பின் பூக்கும். (மஞ்சள் நிறம்) மார்ச் - மே மாதம் வரை கனிகள் கிடைக்கும் பாலை நிலமக்கள் விரும்பி உண்பர். இதில் புரத சத்து அதிகம். பாலை நில மணலில் 60 - 70 அடிவரை வேர் ஊடுருவி வளரும். இம்மர இலைகள் உதிர்ந்த காட்டில் உள்ள மண்ணை ஆராய்ச்சி செய்த போது எல்லாப் பேருட்டங்களும் நுண்ணூட்டங்களும் இருப்பது கண்டறியப்பட்டது. விவசாயிகள் வேலியாக வைத்துப் பயன்பெறலாம். புதர்க்காடுகள் அமைத்தும் பயன்பெறலாம்.

**மருத்துவப் பயன்பாடு**

வன்னிக்கொழுந்தை, பூ, காய், பட்டை, வேர் ஆகியவற்றை விழுதாக அரைத்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு எடுத்து 100மி.லி பாலில் கலக்கி வடிகட்டி அருந்தி வந்தால் ஆயுள் விருத்தி, சொறி, சிரங்கு, கபம், பித்தம் எல்லாம் தணியும் வாதம் நீங்கும். வன்னிப் பட்டையை ¼ கிலோ எடுத்து பஞ்சு போல்

நசுக்கி, 1 லிட்டர் விளக்கெண்ணெயில் நன்கு காய்ச்சி வடித்து, நாள்தோறும் 25 மில்லி வீதம் 1 வாரம் வரை பெண்கள் அருந்தினால் வெள்ளைப் படுதல் நீங்கும்; கருச்சிதைவு ஏற்படாது பட்டைக் கசாயம் தொண்டைப் புண்ணுக்கும் மருந்து.

**வன்னி மரக்கன்றுகள் பெறும் இடம்:** வனத்துறை மற்றும் சங்கீத மங்கலம் கருணாநிதி போன்: 95419 232584, 232335

**3. புன்னை (Calophyllam Enopnyllam)**

***சமஸ்கிருதம்: புன்னாகம், பஞ்சசேகரம்***

***ஹிந்தி: சுர்பன், சுர்புங்கா, சுல்தான்சம்பா***

**தன்மைகள்**

இலத்தீன் மொழியில் இதன்பெயர் கோலோபைலம் - இலையின் அழகு

தமிழ்நாட்டு அரிய மரங்களுள் இதுவும் ஒன்று.

சங்கரன்கோவில், திருப்புனவாயில், திருப்புகலூர், திருமயிலாப்பூர், திருக்கோவிலூர், திருவெண்ணெய் நல்லூர், திருப்பாடகம், பூதக்குடி, திருவேட்டக்குடி - இத்தலங்களில் தலவிருட்சம்.

கடற்கரை மட்டுமல்ல வண்டல் பூமியிலும் சிறப்பாக வளரும்.

**மருத்துவப் பயன்பாடு**

நீங்கா மேகம், முப்பிணி, கரப்பான், சொறி சிரங்கு நீங்கும். மயக்கம் உண்டாகும். அழல் பெருகும். காக்கை வலிப்பு, சன்னி; பாரிசவாயு போன்றவை குணமாகும். இலை அல்லது பூவைத் தண்ணீரில் ஊறவைத்து அந்நீரைக் கொண்டு கண்களைக் கழுவிவர கண்விக்கம், சொறி, சிரங்கு தீரும். இதை,

**"புன்னைப்பூ ஆதல் புதுநீக்க கண்தூய்மை**

**பின்னுஞ் சொறிசிரங்கு போம்**

(கி.ரத்தினவேலனார், சித்தமருத்துவக்குறள்-604)

என்பதன் மூலமும் அறியலாம்.

**பூ**

பூவை உலர்த்தி பொடி செய்து தேனுடன் கூட்டி முப்பிணிக்குக் கொடுக்கலாம்.

**கொட்டை**

இதில் 60% எண்ணெய் உள்ளது.

இந்த எண்ணெய் மேலைநாடுகளில் **'டோம்போ"** என்பது ஏற்றுமதி செய்யப்படுகிறது; மிகச்சிறந்த வலி நிவாரணி.

நீர்விட்டு அரைத்துச் சூடாக்கி சீல்வாயுக்களுக்குப் பற்றிட நோய் நீங்கும்.

இந்த எண்ணெய் பெண் நோயால் ஏற்படும் புண்ணை ஆற்றும். ஆண்,பெண் இருபாலருக்கும் மர்ம ஸ்தானத்தில் ஏற்படும் ஒழுகளுக்கு **டோம்போ** எண்ணெயை ஐரோப்பியர்கள் பயன்படுத்துவர்கள்.

தோல் பகுதியில் ஜவ்வு போன்ற மெல்லிய பாகத்தில் புண்ணாகி நிணநீர் கசிவதைத் தடுப்பதில் இதுவே திட்டவட்டமான மருந்து என **மருத்துவக்களஞ்சியம்** குறிப்பிடுகிறது. புன்னை விதையையும் பருப்பையும் அரைத்துப் பற்றுப்போட முடக்குவாதம், கீழ்வாதம் நீங்கும். இந்தக் கொட்டையின் குணத்தைப் பதார்த்த குண சிந்தாமணியானது,

**"கன்ன விரணங் கடுஞ்சந்தி பாதமுடன்**

**இன்னல்ஊறு வாதை அவைஅகலும் -**
**புன்னைகொட்**

**டைக்கம்மட் டோவென்னில் ஆர்சூதி காவாய்வும்**

**மெய்க்கம்மிட்ட டாழிவாய்வும் இல்"** (779)

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**பட்டை**

பட்டையைக் குடிநீரிட்டு உள்ளுறுப்புகளிலிருந்து வரும் குருதிப் பெருக்குகளுக்கும் கொடுக்க நன்மை பயக்கும். எளிதில் ஆறாமல் குருதி பெருகிக் கொண்டிருக்கும் புண்களைக் குடிநீர் விட்டுக் கழுவிவர அவை ஆறும்.

மரப்பட்டையைக் கசாயமாக உள்ளுக்குத் தரலாம்; வெளிப்புண்களைக் கழுவி மருந்திடவும், டெட்டால் லோஷன் போல் பயன்படும். இதன் பிசினும் புண்ணை ஆற்றும்.

இலைகள் மற்றும் பட்டைகளைத் துண்டாக்கிப் புன்னை மரக்கோந்தையும், தண்ணீரில் ஊற வைக்க வேண்டும்; அப்போது தண்ணீரில் மேற் பரப்பில் எண்ணெய்யாக மிதப்பதை எடுத்துக் கண்விக்கத்திற்குத் தடவிக் கொள்ளலாம்.

இலைகளைப் பூச்சி விரட்டியாகப் பயன் படுத்தலாம்.

**குறிப்பு:** புன்னை விதைகள் கோவையில் வனஇயல் கல்லூரி வளாகத்தில் வனமரபியல் கோட்டத்தில் கிடைக்கும்.

**கிடைக்குமிடம்:** கன்னிவாடி (திண்டுக்கல் ராமசாமி) - 9865437876

**4. விழிச்செடி - விழுதி**

விழி என்றால் விழுதி: (ப.294) என சித்தர்களின் மூலிகை விரிவகராதி பொருள் கூறுகிறது.

•இலையை சமைத்து உணவுடன் உண்ண கரப்பான், வெள்ளை நோய், கட்டிகள், பசியின்மை, வயிற்றுப்புழு, மலக்கட்டு நீங்கும்.





•இலை குடிநீருடன் ஆமணக்கு நெய் சேர்த்து அருந்த கழிச்சலுடன் வயிற்றுப்புழுக்கள் வெளியேறும்.

•இலைச்சாற்றை அருந்த வாதநீர், பித்தநீர் வெளியாகும் மலக்கிருமிகளை வெளியேற்றும்.

•சீல்பிடிப்பு, சில்விக்கம், வாதம், படர்தாமரை, கரப்பான் இவைகளுக்கான வெளிப்பூச்சுத் தைலங்களில் இதன் இலை பயன்படுத்தப் படுகின்றது.

**காய்**

காயை வற்றல் செய்து உண்பர்.

**வேர்**

வேர்க்குடிநீர் பெண்களின் கருப்பைக்குப் பலத்தை அளிக்கும்.

**5.பாதிரி (stereospermum/ suaveolenx)**

பாடலிமரம் என பாதிரி மரம் அழைக்கப்படும்.

**தன்மைகள்**

பெரிய மரம்; மஞ்சள் நிறப்பூ கொண்டது. மிகுந்த நறுமணம் உடையது. வழிபாட்டிற்குரியது.

**மருத்துவப் பயன்பாடு**

வேர், பூ இரண்டையும் கசாயம் வைத்து காய்ச்சலுக்குக் கொடுக்கலாம். உடம்பிற்குக் குளிர்ச்சியைத் தரும். மது மூத்திரம், கரப்பான், மேகவியாதி, கண், காது, கை, கால் எரிச்சல், தெருவிரனம், மூலம், அக்கினிமந்தம் போக்கும்.

இலைச்சாறுடன் எலுமிச்சம் பழச்சாறும் கலந்து தலையில் தேய்த்து ஊறவைத்துப் பின் தலை முழுகிவர தீக்குற்றத்தைப் போக்கி வெறி நோயே நீங்கும் பைத்தியம் மற்றும் மன நோய் குணப்படும். பூவைக் குடிநீரில் இட்டு அல்லது அரைத்து சாப்பிட மேகம் தணியும். சுரம் நீங்கும். பூவின் சாற்றைத் தேன்கலந்து உட்கொள்ள விக்கல் நீங்கும். தாது விருத்தி உண்டாகும். இக்கருத்தை,

**"பாதிரிப்பூ சாறு படுதேன் கலந்தருந்த**

**மாதிரியும் விக்கல் வரா"**

(கி.ரத்தினவேலனார் சித்தமருத்துவக்குறள் - 618)

**பாதிரியின் வேர்குணந்தான் பாக்கில்மது**
**வேகம்போம்**

**ஒதுகரப் பான்உழலை யோடிவிடும் - மாதேகேள்**

**கண்ணெரிவு காதெரிவு கையெரிவு காலெரிவும்**

**நிண்ணயமாய்ப் போகு நிசம்**

**மேகத்தால் வந்த மிகுபிளவை மாவிரணம்**

**போகத்தால் வந்த பெருமூலம் - ஆகத்தில்**

**வந்தசொறி யோடுகப வாதமந்த மும்போகும்**

**கொந்தடரும் படலத்தாற் கூறு**

பதார்த்த குண சிந்தாமணி, ப.110, 111

**பட்டை**

பட்டையைப் பற்பாடகம், பேய்ப்புடல், சித்திர மூலம், சுக்கு, மிளகு இவைகளோடுக் கூட்டிக் கசாயமிட்டுக் கொடுக்க விக்கல், தாகம், காதடைப்பு, மயக்கம் முதலியவை குணமாகும்.

பட்டை ஒரு பங்கு, நீர் பத்துப் பங்கு சேர்த்து ஒரு மணி நேரம் ஊறவைத்து 15 முதல் 30 மி.லி வீதம் காலை, மாலை உட்கொள்ள வயிற்றுவலி, இருமல் சோகை நீங்கும்.

வேரைக் குடிநீரிட்டு அல்லது பொடித்து உட்கொண்டாலும் மேற்கூறிய நோய்கள் குணமாகும். ரஸத்தைப் பஸ்பமாக்கும்.

**முடிவுரை**

தாழம்பூவைச் சிவனுக்குச் சூடமாட்டார்கள் என்ற சிவபுராணக் கதைகளுக்கு முரணாக அமையும் வகையில் 289, 367 ஆகிய திருப்பதிகங்களில் தாழை தலவிருட்சமாய் அமையப்பெற்றிருப்பது சிந்திக்கத்தக்கதாய் உள்ளது.

மேலும் தாவரங்களுள் மிகத் பேருதவியாய் இருப்பவைகளை மனிதர்கள் சாதாரணமாய் நினைத்தவிடக் கூடாது என்பதற்காகவே திருத் தலங்களில் நடப்பட்டு வணங்குமாறு செய்திருக் கிறார்கள் சான்றோர்கள் என எண்டணுவதுடன் நலவாழ்விற்கும் உறுதுணைபுரிந்திருக்கிறார்கள் என்பதையும் மறுத்துவிட முடியாது.

இத்தாவரங்களின் மேன்மையை நன்குணர்ந்தவர்கள் சித்தர்கள்; இவர்கள் கண்டறிந்ததை வைதீக சமயத்தவர்கள் வழிபாட்டிற்குள் புகுத்தி விட்டனர் எனவும், அறைகூவத் தோன்றுகின்றது.

தலவிருட்சங்களே! சிவனே தலவிருட்சங்கள்! (இயற்கையே தெய்வம்) இதை உணர்ந்து வளர்த்தெடுத்து வணங்கி வளம் பெறலாம்.

**துணைநூற்பட்டியல்**


1. திருஞான சம்பந்தர் தேவாரம்
2. என்.கே.சண்முகம், மூலிகைக் கலைக் களஞ்சியம்
3. ஆர்.எஸ்.நாராயணன், வாழ்வுதரும் மரங்கள்
4. புலவர் சி.ரத்தினவேலனார், சித்தமருத்துவக் குறள் நூல்
5. ப.ஆ. ஆர்.சி.மோகன், பதார்த்த குணசிந்தாமணி
6. இல.சண்முகம், தமிழரும் தாவரமும்